## மன்றப்பொருள் 1

தென்காசி நகராட்சிக்குதாமிரபரணி குடிநீர் திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு தற்போது 45.00 இலட்சம் முதல் 50.00 இலட்சம் லிட்டர் வரை குடிநீர் பெறப்பட்டு வருகிறது. தாமிரபரணி திட்டத்தில் உச்ச நிலை 2026ல் 65.00 இலட்சம் லிட்டர் குடிநீர் எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தின் ஆற்று படுகையில் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் மூலம் புதியதாக உறைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி உறைக் கிணற்றிலிருந்து நீரேற்றும் நிலையத்தின் கீழ்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குழாய் பதிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ11.70 இலட்சத்திற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 551**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 2

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி செல்லும் சாலையில் உள்ள தினசரி சந்தை கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கும் மேலாகி விட்டது. எனவே மேற்படி கட்டிடங்கள் பழுதடைந்து'ள்ளதால் அவற்றினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக தினசரி சந்தை அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SS&FC) அரசாணை எண் 45 நாள் 08.11.2023ன்படி ரூ532.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யபட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.12.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறபட்டுள்ளது. எனவே ஏற்கனவே பழுதடைந்துள்ள தினசரி சந்தை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ38.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 552**

சந்தை மார்க்கெட் மற்றும் பொதுசுகாதார பிரிவு அலுவலகம், சுகாதார வளாகம் உட்பட இடித்து அப்புறப்படுத்த அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 3

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட செங்கோட்டை ரோடு செல்லும் சாலையில் வார்டு:C பிளாக் எண்:1 நகரளவை எண்:176ல் உள்ள சீவலப்பேரி குளம் தற்போது பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி குளத்தினை சீரமைத்து பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் வந்து சென்று பயனடையும் பொருட்டு நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மேற்படி குளத்தினை தென்காசி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 553**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 4

தென்காசி நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ம் ஆண்டின் கீழ் புதியதாக தினசரி சந்தை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SS&FC) அரசாணை எண் 45 நாள் 08.11.2023ன்படி KNMT பங்கு தொகை ரூ266.00 இலட்சம், நகராட்சி பங்கு தொகை ரூ266.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ532.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 188484/2023/DO1 நாள் 21.11.2023ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 08.12.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| திரு.K.நவாஸ்கான்<br>ஒப்பந்தக்காரர் | திரு.S.ஆறுமுகம்<br>ஒப்பந்தக்காரர் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 15.12.2023ம் தேதியன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:D, பிளாக் எண்:7, நகரளவை எண்: 52, 53, 54, 55, 56, 57, 58 மற்றும் 59ல் புதியதாக தினசரி சந்தை அமைத்தல் | 532.00 | திரு.K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 4.99% கூடுதல் |
| | | | திரு.S.ஆறுமுகம் ஒப்பந்தக்காரர் | 10.02% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பிட்டினைவிட கூடுதலில் குறைவான உள்ளது எனவே மேற்படி ஒப்பந்தக்காரருக்கு விலையினை குறைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:1037/2023/இ1, நாள்:18.12.2023ல் விலைக்குறைப்பு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட மேற்கண்ட ஒப்பந்தக்காரர் 20.12.2023ம் தேதியன்று மதிப்பீட்டினைவிட 4.90% கூடுதல் என்ற விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள சம்மதக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட திருத்திய் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 4.90% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் திருத்திய ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்

**தீர்மானம் எண் : 554**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான 7வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் தற்போது 331 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும் இனிவரும் காலங்களில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனவே கல்வி பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளியில் கூடுதலாக கட்டிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 555**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10 மவுண்ட் ரோடு மக்கன் தெருவில் ரூ6.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்:421 நாள்:04.08.2023ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மானம் எண் 533 நாள் 10.11.2023ம் தேதியன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 14.11.2023ம் தேதியன்று Rajkamal Construction என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் சிமெண்ட் தளக்கற்கள் சாலைக்கு பதிலாக சிமெண்ட் சாலையாக மாற்றம் செய்து தரும்படி கோரியுள்ளார். எனவே நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி மேற்படி பணியில் சிமெண்ட் தளக்கற்கள் சாலைக்கு பதிலாக, சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 சிமெண்ட் தளக்கற்கள் சாலை பணிக்கு பதிலாக சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைவிகித்தின்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 556**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 7

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12ல் ரூ5.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்:421 நாள்:04.08.2023ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மானம் எண் 533 நாள் 10.11.2023ம் தேதியன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 14.11.2023ம் தேதியன்று திரு.S.ராவீன் ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் சிமெண்ட் தளக்கற்கள் சாலைக்கு பதிலாக சிமெண்ட் சாலையாக மாற்றம் செய்து தரும்படி கோரியுள்ளார். எனவே நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி சிமெண்ட் தளக்கற்கள் சாலைக்கு பதிலாக, சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 சிமெண்ட் தளக்கற்கள் சாலை பணிக்கு பதிலாக சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைவிகித்தின்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 557**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 8

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 1 அண்ணா நகரில் உள்ள பசுமை உரக்குடில் மையத்தில் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக புதியதாக Pulvarizer இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இயந்திரம் செயல்பட தேவையான இடவசதி இல்லாததால் இயந்திரத்தினை செயல்படுத்த இயலவில்லை. எனவே மேற்படி இடத்தில் உள்ள MCC மற்றும் MRF மையங்களுக்கு இடையே உள்ள இடத்தில் மேற்கூரை மற்றும் தரைதளம் அமைத்து Pulvarizer இயந்திரம் பொருத்தி இயக்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 558**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 9

தென்காசி வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடித ந.கஎண்.TKSTLK/1827/2023-B1, நாள்.14.11.2023ம் தேதிய கடிதத்தில் வரப்பெற்ற தென்காசி வட்டம், புலியூர் கிராமம், 144/1சி-1, மாதாங்கோவில் 1ம் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் திரு.முருகன் என்பவர் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வரும் நிலத்திற்கு வரன்முறை பட்டா வழங்க கோரியுள்ளார் எனவும் மேற்படி புலியூர் கிராமம், வார்டு – D, பிளாக் – 7, புல எண்– 48, பரப்பளவு – 0.04.65 ஹெக்டேரில் சர்க்கார் புறம்போக்கு தெரு என வகைபாடுள்ள நிலத்தில் 0.00.20 ஹெக்டேர்ஸ் அளவில் வீடு உள்ளதாகவும் வீடு கட்டி 10 ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், தனது தகப்பனார் திரு.லேட்.பட்டன் என்பவர் பெயரில் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு பெற்று கட்டணம் செலுத்தி வருவதாகவும், மேற்படி வீட்டைத் தவிர வேறு வீடு மற்றும் நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏதுமில்லை என தெரிவித்து மேற்படி நிலம் சர்க்கார் புறம் போக்கு தெரு என வகைபாட்டில் உள்ளதால் தென்காசி நகராட்சி மூலம் மனுதாரருக்கு பட்டா வழங்க ஆட்சேபனை ஏதுமில்லை என தடையின்மை சான்று வழங்குமாறு கோரியுள்ளார்கள். மேற்படி இடமானது நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் கட்டிடத்திற்கு வடபுறம் உள்ள தெருவில் உள்ளது. மேற்படி தெருவின் முன் முகப்பின் அகலம் அதிகமாக உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வீடு கட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி முகவரியில் வசித்து வரும் திரு.முருகன் என்பவருக்கு பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை என்று தடையின்மை சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2734/2023/எப்1

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 559**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 10

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடைஎண் 23 கடையின் குத்தகைத்தாரர் திருமதி.மாரியம்மாள் என்பவர் மேற்படி கடையை நடந்த இயலாத நிலை உள்ளது எனவும் ஆகையால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடை எண்.23ஐ மறுஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் பழைய குத்தகை உரிமத்தினை ரத்து செய்யவும் மன்றத்தின் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 560**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 11

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடைஎண் 24 கடையின் குத்தகைத்தாரர் திரு.பி.சிவபிரசாரத் என்பவர் மேற்படி கடையை நடந்த இயலாத நிலை உள்ளது எனவும் ஆகையால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடை எண்.24ஐ மறுஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் பழைய குத்தகை உரிமத்தினை ரத்து செய்யவும் மன்றத்தின் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 561**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 12

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடைஎண் 25 கடையின் குத்தகைத்தாரர் திருமதி.ஜெயா என்பவர் மேற்படி கடையை நடந்த இயலாத நிலை உள்ளது எனவும் ஆகையால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடை எண்.25ஐ மறுஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் பழைய குத்தகை உரிமத்தினை ரத்து செய்யவும் மன்றத்தின் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 562**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 13

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கொசு மருந்து பைத்ரம் மற்றும் டெமிபாஸ் ஆகிய கொசு மருந்துகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,00 லட்சத்திற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் வாங்கவும் நகர்மன்றத் தீர்மான 478 நாள். 13.10.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. அதன்படி அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட நிறுவனமான M/S PARAMOUNT PESTICIDES LIMITED, 2/3FIRST FLOOR MUTHUKRISHANAN STREET, THYAGARAYA NAGAR CHENNAI 600 017.விநியோகம் செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது வரை கொசு மருந்துகள் விநியோகம் செய்யப்பட வில்லை.

எனவே மழைக் காலமாக உள்ளதால் கொசுமருந்த மிக அவசியமாக தேவைப்படுவதால் ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட நிறுவனத்திடம், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்தில் வாங்குவதறகு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. பொதுசுகாரத்தின் அவசரம் அவசியம் கருதி ஏற்கனவே கொசு மருந்து விநியோகம் செய்யப்பட்ட நிறுவனத்திடம் வாங்க அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 563**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுதுகளை சரிசெய்வதற்கு 29.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | SAKTHI INDUSTRIES, 46E. VETRI VINAYAGAR KOIL STREET, HANNUMANTHAPUTHERI, CHENGALPATTU. | RS. 12890/- (GST INCULDING) |
| 2 | OM SAKTHI TECH SERVICES. MANUFACTURES ALL TYPE OF FOGGING MACHINE) 115. NANDHA MIDAS. CITY. CHENGALPATTU. | RS. 12350/- (GST INCULDING) |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் கண்டுள்ள OM SAKTHI TECH SERVICES. (MANUFACTURES ALL TYPE OF FOGGING MACHINE) 115. NANDHA MIDAS. CITY. CHENGALPATTU என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 564**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 15

இந்நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடங்களில் உள்ள நச்சுத் தொட்டிகள் நிரம்புவதை சுத்தம் செய்வதற்கு 29.11.2023ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை .<br>(நடை ஒன்றிற்கு ) |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சுடலைமுத்து, அரசு ஒப்பந்தக்காரர், 111, உச்சிமாகாளி 4ம் தெரு, கீழப்புலியூர், தென்காசி. | ரூ.9000/– |
| 2 | திரு. எஸ். முருகன், அரசு ஒப்பந்தக்காரர், 193, உச்சிமாகாளி அம்மன் கோவில் 2ம் தெரு, கீழப்புலியூர், தென்காசி. | ரூ.8100/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் கண்டுள்ள திரு. எஸ். முருகன், அரசு ஒப்பந்தக்காரர், 193, உச்சிமாகாளி அம்மன் கோவில் 2ம் தெரு, கீழப்புலியூர், தென்காசி. என்ற ஒப்பந்தக்காரர் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 565**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 16

இந்நகராட்சி எல்கைகுட்பட்ட பகுதிகளில் வாகனங்கள் செல்ல இயலாக தெருக்களில் உள்ள கழிவு மண்களை அகற்றம் செய்வதற்கு (TRALLY) 29.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் , கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | MOHANA PRIYA TRADERS. LIG.I-686 TAMILNADU HOUSING BOARD COLONY THOPPUR. MADURAI.625 008. | RS. 14850/- (GST INCULDING) |
| 2 | RAJALAXMI AGENCIES, 4 NATCHIYARPURAM 1ST STREET. PASUMPON NAGAR, PALANGANATHAM, MADURAI – 625 003. | RS. 14970/- (GST INCULDING) |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள MOHANA PRIYA TRADERS. LIG.I-686 TAMILNADU HOUSING BOARD COLONY THOPPUR. MADURAI.625 008. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 566**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 17

அரசாணை (நிலை) எண் 760 பொது (முதல்வரின் முகவரி)த் துறை நாள். 14.12.2023ம் தேதிய தெரிவிக்கப்பட்டுள்ள முதல்வரின் முகவரித்துறை **மக்களுடன் முதல்வர்** என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

அதன் படி மக்களுடன் முதல்வர் என்ற புதியத் திட்டத்தின் அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் **மக்களுடன் முதல்வர்** திட்டத்தில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து ஒரே குடையின் கீழ் கோரிக்கைகளை பெற அனைத்து மாவட்டங்களிலும் இச்சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேதிக்கப்பட்டுள்ளதால் பிற துறை அலுவலர்களுடன் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் போதிய விளம்பரங்களை, செய்தி பிரசுரங்கள், மின்னனு மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக முகாம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் நடத்தப்படும் இடம் ஆகியவற்றை முகாம் நடைபெறுவதற்கு முன்பாக தெரிவித்து பெரும்பாலமான மக்கள் பங்கேற்கும் வகையில் சிறப்புடன் நடத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 18.12.2023 முதல் 7 தினங்களில் நடைபெறுவதற்கு விளம்பர பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் தயார் செய்வதற்கும் மற்றும் இதர செலவினங்கள் உத்தேச செலவினமாக ரூ.1,00,000/– (ஒரு லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த விளம்பர பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கவும் மற்றும் இதர செலவினத்திற்கும் சேர்த்து ஒரு லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 567**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 18

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76AM7258 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 23.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. | ரூ.39435/– |
| 2 | முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ், 3/514,தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.42700/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 568**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 19

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76AM7283 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள **23.11.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், **194**, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. | ரூ.**38735/–** |
| 2 | முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ், **3/514**,தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.**41100/–** |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். **1**ல் கண்டுள்ள மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், **194**, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 569**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 20

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76F8885 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள **13.12.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், **194**, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. | ரூ.**88900/–** |
| 2 | முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ், **3/514**,தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.**97800/–** |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். **1**ல் கண்டுள்ள மூஸா இஞ்சினிரியங் ஓர்க்ஸ், **194**, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 570**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 21

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76AM7288 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 13.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினிரியங் ஒர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. | ரூ.34285/– |
| 2 | முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், 3/514,தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.37850/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள மூஸா இஞ்சினிரியங் ஒர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 571**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 22

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76AM7278 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 13.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினிரியங் ஒர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. | ரூ.33225/– |
| 2 | முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், 3/514,தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.37150/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள மூஸா இஞ்சினிரியங் ஒர்க்ஸ், 194, தைக்கா தெரு, செங்கோட்டைரோடு, தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 572**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 23

தூய்மை இந்தியா இயக்ககம் திட்டத்தின் அடிப்படையில் தனிநபர் வீடுகளில் உள்ள கழிப்பறைகள், செப்டிக் டேங்க் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு குறித்த விபரங்களை பரப்புரையாளர்கள் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் என திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 11.12.2023ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தின் போது அறிவுறுத்தப்பட்டது.

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிப்பறைகள் விபரங்களை உரிய படிவங்களில் சேகரிக்க தேவையான படிவங்களை அச்சடிக்க வேண்டியுள்ளதால் , (படிவம் 1, படிவம் 2 , படிவம் 3 ) உள்ளூர் கூட்டுறவு அச்சகத்தில் படிவங்களை அச்சடிக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 75,000/– ( ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும் ) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. கழிப்பிடங்களை கணக்கெடுப்பதற்கு தேவையான படிவங்கள் உள்ளூர் கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிக்கவும், உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 573**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 24

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25மாதாங்கோவில் 1ம் தெருவில் ரூ5.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்:151 நாள்:09.09.2022ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மானம் எண் 258 நாள் 13.01.2023ம் தேதியன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 13.01.2023ம் தேதியன்று திரு.P.மோகன் ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மழைநீர் வடிகால் பணியோடு சேர்த்து சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைக்கும் பணியும் சேர்த்து செய்து தரும்படி கோரியுள்ளார். எனவே நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி மேற்படி பணிக்கு பதிலாக சிமெண்ட் தளக்கற்கள் சாலை மற்றம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மழைநீர் வடிகால் பணியுடன் சேர்த்து சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ள ஒப்பந்தக்காரர் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலை விகித்தின்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 574**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 25

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு பல்வேறு இடங்களில் குடிநீர் வால்வுகள் உள்ளன. மேற்படி வால்வுகள் திறந்தவெளியில் இருக்கும் காரணங்களினால் வால்வுகள் சரியான முறையில் பராமரிக்க இயலாமல் பழுதடைய வாய்ப்புகள் உள்ளன. ஆகவே 15 இடங்களில் குடிநீர் வால்வுகளை பாதுகாப்பதற்கான வால்வு பிட் அமைத்து இரும்பிலான மேல் மூடி அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 575**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 26

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32 சம்பா தெருவில் இந்நகராட்சி சொந்தமான திடக்கழிவு மேலாண்மை பணிக்கான பேட்டரி மூலம் இயங்கும் இலகு ரக வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளது. மேற்படி இடத்தின் தரைதளம் மண்ணாக உள்ள காரணத்தினால் வாகனங்கள் மழை காலங்களில் வெளியே எடுப்பதற்கும் கொண்டு சென்று நிறுத்துவதற்கும் மிகவும் கடினமாக உள்ளது. மேலும் மேற்படி வாகனங்கள் பேட்டரி மூலம் இயங்குவதால் அவற்றிக்கு தேவையான மின்வயர்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்து மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 576**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 27

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9 மதினா நகரில் சாலையின் நடுவில் உள்ள அடிபம்பு பழுதடைந்து பொதுமக்காளல் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள அடிபம்பினை அகற்றி தரும்படி 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். அதனடிப்படையில் மேற்படி அடிபம்பினை அகற்றிட மன்ற வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் :** 577

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 28

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 6 மலையான் தெரு வண்ணான் குளம் எதிர்புறம் உள்ள சுகாதார வளாகம் மற்றும் செங்குந்தர் புது தெருவில் உள்ள குடிநீர் தொட்டி கட்டிடம் சேதமடைந்து பொதுமக்களால் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள குடிநீர் தொட்டி கட்டிடம் மற்றும் சுகாதார வளாகத்தினை இடித்து அகற்றிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ0.30 இலட்சத்திற்கு மன்ற வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் :** 578

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 29

தென்காசி நகராட்சி முதல் நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தற்போது தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே அலுவலக மற்றும் பணியாளர்களுக்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் தற்போது நகராட்சி கட்டிடத்தின் மேல்புறம் ஏற்கனவே உள்ள பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் புதியதாக அலுவலக கட்டிடம் கட்ட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ38.00 இலட்சத்திற்கு மன்ற வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் :** 579

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 30

தென்காசி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் மற்றும் அலுவலக கட்டிட மேற்கூரையை பராமரித்தல் ரூ9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்:189 நாள்:17.10.2022ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மானம் எண் 294 நாள் 24.02.2023ம் தேதியன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 27.02.2023ம் தேதியன்று திரு.C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி பணிக்கு பதிலாக அலுவலக அறைகளை Partition செய்தல், அனைத்து பிரிவுகளுக்கும் கணிணி வசதி அமைத்தல், மற்றும் அலுவலக கட்டிடங்கள் மராமத்து மேற்கொள்ளும் பணியாக மாற்றம் செய்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கு பதிலாக அலுவலக அறைகளை Partition செய்தல், அனைத்து பிரிவுகளுக்கும் கணிணி வசதி அமைத்தல், மற்றும் அலுவலக கட்டிடங்கள் மராமத்து மேற்கொள்ளும் பணியாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலை விகித்தின்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 580**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் (தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் சுத்தமான கழிப்பறை பிரச்சாரம் (Clean Toilet Campaign)) பொது நிதி 2023-24ம் ஆண்டின் கீழ், கீழ்கண்டபணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | களக்கோடி தெருவில் உள்ள சுகாதார வளாகத்தில் வர்ணம் பூசுதல், மாற்றுதிறனாளிகளுக்கு சாய்வுதளம் அமைத்து மராமத்து பணிகள் மேற்கொள்ளதல் | 4.00 |
| 2 | மலையான் தெருவில் உள்ள இரண்டு சுகாதார வளாகம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 3 | சிந்தாமணி, பழைய பேரூந்து நிலையம், கூளக்கடை பஜார் ஆகிய இடங்களில் உள்ள சுகாதார வளாகங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 4 | வள்ளி நகர் மற்றும் அண்ணர தெரு ஆகிய இடங்களில் உள்ள சுகாதார வளாகங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 3.00 |

மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 581**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 32

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 29 சுவாமி சன்னதி பஜார் பெரிய லாலா கடை முன் பகுதியிலிருந்து கிருஷ்ணா பேக்கரி வரையுள்ள இடங்கள் மண் பகுதியாக இருக்கும் காரணத்தினால் மழைக்காலங்கள் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் அப்பகுதியில் அதிகப்படியான பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து உள்ள காரணத்தினால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி மண்ணாக உள்ள இடத்தில் சிமெண்ட் தளக்கற்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள ஜ்யார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செல'வினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 582**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 33

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வளர்க்கப்பட்டு வரும் பன்றிக தொல்லைகள் களைவது குறித்து தென்காசி, கோட்டாட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்ட அறிவுரையின்படியும், 1998ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 107 உட்பிரிவு (2)ன் படி ஒரு பொது தெரு அல்லது பொது இடத்தில் சுற்றித்திரிவதாக காணப்படுகின்ற பன்றியும் ஆணையாளரால் இது தொடர்பாக எழுத்துப்பூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபராலும், விசாரணை நடவடிக்கைகள் ஏதுமின்றி அகற்றப்படலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பன்றி வளர்ப்பவர்களுக்கு ஏற்கனவே அறிவிப்பு நோட்டீஸ் கொடுத்த பட்சத்தில், மீண்டும் பன்றிகள் சுற்றி திரிவதாலும், பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், தினசரி நாளிதழ்களில் செய்திகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு பன்றிகளை அப்புறப்படுத்துவதற்கு விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், மற்றும் விளம்பரங்கள் இதர செலவினத்திற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/−க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : தெருக்களில் சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்துவதற்கு விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ.50000/−க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 583**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 34

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 20383/2022/H1 நாள் 30.11.2023ம் தேதிய சுற்றறிக்கையின்படி நகராட்சிகள் எல்லைக்குட்பட்ட பகுதியில் சுற்றிதிரியும் தெருநாய்களுக்கு கருத்தடை செய்யும் கட்டிடம் நவீன வசதிகளுடன் கூடிய அறுவை சிகிச்சை அறை, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அறை மற்றும் கொண்டுவரக்கூடிய நாய்கள் இருப்பதற்கான அறை மற்றும் அறுவை சிகிச்சை செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் மருந்துகள் பாதுகாக்கும் அறை கழிப்பிட வசதி ஆகியவற்றுடன் கூடிய விலங்குள்(நாய்) காப்பகம் மற்றும் கருத்தடை செய்யும் கட்டிடம் கட்டுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஆய்க்குடி செல்லும் சாலையில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான MCC. RRC மற்றும் MRF ஆகிய கட்டிடங்கள் இருக்கும் இடத்தில் ஏற்கனவே உள்ள விலங்கு காப்பக கட்டிடம் மிகசிறிய அளவில் உள்ளதல் மேற்படி இடத்தில் உள்ள RRC கட்டிடத்தினை ABC கட்டிடமாக மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 584**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 35

இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் ATM இயந்திரம் நிறுவுவதற்கு 8 x 8 அடி அகலம் இடம் வாடகைக்கு ஒதுக்கீடு செய்து வழங்க திரு.A.மகபூப்ஜான் சேட், த/பெ.M.அக்பர் அலி, தென்காசி என்பவரால் கோரப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.34283/2008/ப்பி4, நாள்.10.07.2008ல் உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள இடங்கள் குத்தகைக்கு விட உத்தேசிக்கப்படுமானால் முதலில் நகர்மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும், பின்னர் அரசின் அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையத்தில் 8 x 8 அடி அகல அளவு காலியிடம் அரசின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : அரசின் அனுமதி பெற்று இடம் ஒதுக்கீடு செய்ய பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 585**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 36

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இணைப்பில் கண்ட இனங்களின் குத்தகை உரிம காலம் 31.03.2024ல் முடிவடைய உள்ளதால் மேற்படி இனங்களை 01.04.2024 முதல் 31.03.2027 முடிய குத்தகை உரிமம் ஒப்படைக்க ஏல நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டி உள்ளது. எனவே மேற்படி இனங்களை குத்தகைக்கு விடவும், ஏல அறிக்கை அச்சடிக்கவும் குத்தகை இனங்களை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 586**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றத்தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.